In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 163/2023 | Prosecution witness P.W.2 |
| Name: Balasubramani @ Balaji | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 15-04-2025.

**(Accused 1 produced through V.C. A4, 6 are produced. A3, A5, A7, A8, A9 are present.)**

முதல் விசாரணை :-

நான் திண்டுக்கல்லில் குடியிருந்து வருகிறேன். நான் சிட்டி மருத்துவமனைக்கு பின்புறம் கொரியர் அலுவலகம் வைத்துள்ளேன். காணொளி காட்சி மூலமாக ஆஜரில் உள்ள 1வது எதிரியும், நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள மற்ற எதிரிகளையும் எனக்குத் தெரியும். சம்பவத்தில் இறந்துபோனவர் என் நண்பர் சரவணக்குமார். 20.07.2023ம் தேதி திண்டுக்கல், அண்ணா நகர் அருகே உள்ள தைலாக்காட்டில் நான், தினேஷ், கார்த்திக், விக்னேஷ், மற்றும் 20 பேர்கள் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்தோம். சரவணக்குமார் மாலை 6.30 மணியளவில் அவரது குழந்தையுடன் அங்கு வந்தார். கொஞ்சநேரம் விளையாண்டுவிட்டு அண்ணன் சரவணக்குமார் அவரது குழந்தையுடன் மஞ்சள் கலர் டியோ பைக்கில் எங்களுக்கு முன்னால் சென்றுகொண்டிருந்தார். நானும் என் நண்பர் தினேஷ் பாண்டியும் பின்னால் என்னுடைய வண்டியில் சென்றுகொண்டு இருந்தோம். எங்களுக்கு பின்னால் யாரும் வரவில்லை. அப்படி போய்க்கொண்டிருக்கும்போது அண்ணா நகர், விமலா ஆஸ்பத்திரி பக்கத்தில் சரவணன் அண்ணன் இறந்துகிடந்தார். ஏற்கனவே அல்லாசிக்கும் அவருடன் சம்மந்தப்பட்டர்களுக்கும் என் அண்ணனுக்கும் பகை இருந்தது. ஒரு வீடியோ ரிலிசானதில் சரவணன் ரிலீஸ் செய்ததாக நினைத்து அது சம்மந்தமாக

பகை இருந்தது. அந்த வீடியோ ரிலிசாகி சுமார் 1.1/2, 2 மாதத்தில் சரவணன் இறந்துவிட்டார். சரவணனை வெட்டிய சம்பவத்தை நான் பார்க்கவில்லை. நான் பார்த்தபோது சரவணனுக்கு பின்மண்டையில், கை, கழுத்து ஆகிய இடங்களில் காயங்கள் இருந்தது. 1.1/2 வயது குழந்தை வேதமித்ரன் பக்கத்தில் கன்னத்தில், தலையில் லேசான காயத்துடன் கிடந்தது. நாங்கள் சென்றபோது அங்கு யாரும் இல்லை. அதன் பிறகுதான் கூட்டம் கூடியது. எனது நண்பர் அண்ணன் சுதன்பிரபுவை போன் செய்து வரச்சொல்லி குழந்தையை கொடுத்து அண்ணன் வீட்டில் கொண்டுபோய் கொடுக்கச்சொன்னேன். கூட்டம் கூடியது. போலீசார் வந்தனர். ஆம்புலன்ஸ் வந்தது. இறந்த நிலையில் கிடந்த சரவணனை ஆம்புலன்சில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நானும் தினேஷ்பாண்டியனும் மருத்துவமனைக்கு சென்றோம். மறுநாள் ஆய்வாளர் என்னை விசாரித்தார். போலீசார் என்னை விசாரித்தபோது அண்ணன் சரவணன் குழந்தையை கூட்டிக்கொண்டு இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும், பின்னால் சென்ற நாங்கள் சரவணன் இறந்துகிடந்ததை பார்த்ததாக மட்டுமே சொன்னேன். வேறு சம்பவத்தை பார்த்ததாக சொல்லவில்லை.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாகக் கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

போலீசார் என்னை விசாரித்தபோது, 20.07.2023 ம் தேதி மாலை சுமார் 05 மணியளவில் எனது நண்பர் விக்னேஷ், சுதன்பிரபு, தினேஷ்பாண்டி மற்றும் சிலரும் தைலக்காடு கிரவுண்டில் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்தபோது 06.30 மணியளவில் பட்டறை சரவணன் அவரது குழந்தையுடன் அவரது கருப்பு மஞ்சள் கலர் டியோ பைக்கில் வந்து எங்களுடன் கொஞ்சநேரம் கிரிக்கெட் விளையாடினார்என்றும் பின்னர் 07.10 மணியளவில் விளையாட்டை முடித்து

சரவணன் அவரது பைக்கில் முன்னாடி குழந்தையை வைத்துக்கொண்டு கிளம்பினார் என்றும், பின்னாடி என்னுடைய பைக்கில் நான் தினேஷ்பாண்டியை ஏற்றிக்கொண்டு அண்ணனுக்கு பின்னாடியே சுமார் 200 மீட்டர் தள்ளி விமலா ஆஸ்பத்திரி ரோட்டில் போய்க்கொண்டிருந்தபோது விமலா ஆஸ்பத்திரியை சரவணன் அண்ணன் தாண்டினதும் ஆஸ்பத்திரி பெண்டுல நின்றிருந்த ஒரு சிவப்பு கலர் கார் வேகமாக சரவணன் பின்னாடியோ போய் சாலு ரோட்டுக்கு முன்னாடி வைத்து அந்த காரில் இடதுபக்க பின் சீட்டில் இருந்தவர் கார் கதவை திறந்து சரவணனின் பைக்கில் இடித்து கீழே தள்ளிவிடவும் அங்கு ஏற்கனவே தயாராக நின்றிருந்த மூன்று பேர் மேற்படி சிவப்பு காரிலிருந்து இருவரும் பார்த்தால் அடையாளம் தெரியக்கூடிய 5 பேர் பட்டா கத்தியுடன் ஓடி வந்து வெட்டுடா, வெட்டுடா என சத்தம்போட்டுககிட்டே சரவணன் அண்ணனை கைகள், தலை, முகம் ஆகிய பகுதிகளில் சரமாறியாக வெட்டினார்கள், அதில் ரத்தம் தெரித்தது, அதனை பார்த்த நானும் தினேசும் பயந்துகொண்டு விமலா ஆஸ்பத்திரிக்கிட்ட அப்படியே நின்றுகொண்டோம், சரவணனின் குழந்தை அருகிலேயே அழுதுகொண்டிருந்தது பின் 5 பேரில் ஒருவர் செத்துட்டாண்டா வாங்கடா போலாம் என சொன்னதும் 5 பேரும் கத்திகளுடன் காரில் இரண்டு பேரும் ஒரு பைக்கில் இரண்டு பேரும், இன்னொரு பைக்கில் ஒருத்தனும் ஏறி விவேகாநந்தா நகர் பக்கமாக தப்பி சென்றனர் என்றும் உடனே நாங்கள் சென்று பார்த்தபோது சரவணன் அண்ணன் பின்னந்தலை சிதைந்து இறந்தநிலையில் குப்புற கிடந்தார் என்றும், குழந்தையை நானும் தினேசும் தூக்கினோம் என்றும் தினேஷ் எங்களது நண்பர் சுதன்பிரபுக்கு போன் செய்து தகவலைச் சொன்னார் என்றும் சுதன் பிரபு உடனடியாக அங்கு வந்தவுடன் குழந்தையை வாங்கி அண்ணன் மனைவியிடம் கொடுத்துவிட்டு தகவலை சொல்லி வருவதாக கூறிச்சென்றான் என்றும், பின்னர் சிறிது நேரத்தில் சரவணனின் மனைவியும், அவரது தாயார் மாரியம்மாளும் வந்தார்கள் என்றும், பின்னர் கூட்டம்

கூடிவிட்டது என்றும், ஆம்புலன்சில் பிரேதத்தை ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசென்றார்கள் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது எதிரிகளை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**1,3 மற்றும் 5ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

ஆஜர் எதிரிகளின் பெயர், முகவரி எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் எனக்கு முன்னப்பின்ன பழக்கம் கிடையாது என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன விவரத்தைத்தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வேறு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**4 6,7,8,9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

1,3,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.04.15 15:54:33 +0530

Principal District Judge,
Dindigul.